[20th October 1964

திருவிலஞ்சி குமரன் கூட்டுறவு விவசாயப்பண்ணை, இலஞ்சி

* 38 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுக்கா, இலஞ்சி கிராமம் 2095 நெ. திருவிலஞ்சி குமரன் கூட்டுறவு விவசாயப்பண்ணை சம்பந்தமாக அரசாங்கத்திற்கு புகார் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சங்கத் தலைவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுக்கள் வந்தன. மாநில கூட்டுறவு சங்க பதிவாளருடன் அந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து கலந்தாலோசித்து, அவற்றின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கு அடுத்தாற்போல் ஆகஸ்ட் 1964-ல் மற்றும் சில குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுக்கள் வந்தன. இந்தக் குற்றச்சாட்டுகள் மாநில கூட்டுறவு சங்க பதிவாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த கூட்டுறவுப் பண்ணை ஆரம்பித்து எத்தனை வருடமாகின்றது. எவ்வளவு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இதுவரை லாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடந்து வருகிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இந்த பண்ணையில் 68 ஏக்கர் உழவு செய்வதற்கு எடுத்திருக்கிறார்கள். ஏழு பேர் மானேஜ்மென்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். 79 மெம்பர்கள் இருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன்: இந்த நிர்வாகஸ்தர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று தீர்மானிப்பதற்குரிய காரணம் என்ன, அவர்கள் மீது வந்த புகார் என்ன, இந்த புகாரின் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இதில் முக்கியமாக மெம்பர்களை சேர்த்துக்கொள்வதில் தகராறு இருக்கின்றது என்பதைப்பற்றித்தான் முதலில் கேட்டார்கள். பிறகு சில டிஸ்க்ரிமினேஷன் அதாவது சில பாகுபாடுகள் இருப்பதாக புகார் சொல்லப்பட்டது. இதைப்போன்ற புகார்கள் ஆரம்பத்தில் வந்தது. இதைப்பற்றி ரெஜிஸ்டிரார் அவர்கள் விசாரித்து இதில் ஒன்றும் இல்லை, ஒழுங்காகத்தான் நடக்கிறது என்று சொல்லி தள்ளிவிட்டார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா: இதே கிராமத்தில் இன்னொரு சொஸைட்டி இருந்தும் அதற்கு கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு இதில் அடங்கியிருந்ததா?

20th October 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது, இன்னொரு சொஸைட்டியும் தங்கள் சொஸைட்டிக்கு நிலம் ஒதுக்கப்படவேண்டும் என்று கோரியிருந்தார்கள். அதற்கும் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பது தான்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த தகவல்கள் என்னிடமில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that most of the Co-operative Farming Societies have failed, will the Government consider the desirability of giving up these societies ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: எல்லா இடத்திலும் சரியாக நடக்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

திரு. க. ர. நல்லசிவம்: இந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு சர்க்கார் மான்யமாக எவ்வளவு கொடுத்திருக்கிறது? கடனை எவ்வளவு கொடுத்திருக்கிறது? கொடுத்த கடனை எல்லாம் ஒழுங்காக காலா காலத்தில் கட்டிவிட்டார்களா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The Government guarantee to the repayment of short-term loans for Rs. 10,000 from the Central Bank. The Society has since been sanctioned a Government loan of Rs. 8,150 and a subsidy of Rs. 1,400 for the purchase of plough bulls and agricultural implements.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: எல்லா கூட்டுறவு சங்கங்களும் சரியாக நடக்கவில்லை என்று சொல்லமுடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் சரியாக நடக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் எத்தனை என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் சபாநாயகர்: உடனடியாக எப்படி இதற்கு பதில் சொல்ல முடியும்?

திரு. கோ. சி. மணி: சம்பந்தப்பட்ட புகார் விசாரணை செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அதுதான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். கொடுக்கப்பட்ட புகாரைப் பற்றி ரெஜிஸ்டிரார் அவர்கள் விசாரணை செய்து அதில் ஒன்றும் இல்லை என்று தள்ளிவிட்டார்கள். அடுத்ததாக மறுபடியும் வைஸ் பிரசிடென்டாக இருப்பவர் வேறொரு புகார் அனுப்பினார்கள். பின்னால் அவ்விதம் கொடுக்க புகாரில் சொன்னது ஒன்றும் இல்லை என்று வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். வேறுள்ள புகார்களை எல்லாம் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

[20th October 1964

மீன் வளர்த்தல்

*39 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் என்னென்ன வகை மீன்கள் வளர்க்கப் படுகின்றன?

(இ) நம் மாநிலத்திலிருந்து மீன்கள் இன உற்பத்திக்காகவும், உணவுக்காகவும் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா?

(உ) இம் மாநிலத்தில் எங்கெங்கு மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன?

(எ) 1962-63-ல் பதப்படுத்துவதற்காக செலவான தொகை எவ்வளவு? அதனால் வருவாய் எவ்வளவு?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) இம் மாநிலத்தில் அடியிற் கண்ட மீன் வகைகள் வளர்க்கப்படுகின்றன:—

கண்ணாடிக் கெண்டை, தங்கக் கெண்டை, ட்ரவுட், காக்கா மீன், சேல் கெண்டையில் மூன்று நான்கு ரகங்கள், வெண்கெண்டையில் இரண்டு மூன்று ரகங்கள், வாளை, கானும் கெளுத்தி, விரால் திலாப்பியா. கண்ணாடிக் கெண்டை, பால்மீன், மடவை, சங்கரா போன்றவை.

(இ) ஆம். பொதுமக்கள் உட்கொள்வதற்காகவும் வளர்ப்பதற்காகவும் மீன் வகைகள் இம் மாநிலத்திற்கு வெளியில் உள்ள இடங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

(உ) 1. மேட்டூர் அணைக்கட்டு, சேலம் மாவட்டம்.

2. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.

3. எண்ணூர், செங்கற்பட்டு மாவட்டம்.

4. நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

5. கடலூர், தென் ஆர்க்காடு மாவட்டம்.

6. நீலங்கரை, செங்கற்பட்டு மாவட்டம்.

(எ) 1962-63-ல் செலவான தொகை: 60,950 ரூபாய் 43 காசுகள்.

1962-63-ல் பெற்ற வருமானம்.—61,532 ரூபாய் 21 காசுகள்.

திரு. சா. கணேசன்: வாழைப்பழம் ஏற்றுமதிக்கு கஷ்டங்கள் இருப்பதாக சொல்லப்பட்டது. அப்படியென்றால் இதிலுள்ள வாளையையாவது ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: நான் குறிப்பிட்டது வாழை அல்ல. வாளை என்கின்ற மீனைப்பற்றி.

திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, மீன் வகைகளை பிடித்து பதப்படுத்தி வைக்கின்ற முறைகள் நம் நாட்டில் குறைவாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற மீன்களைத்தான் நாம் உபயோகப்படுத்தவேண்டியிருக்கிறது.